செ.கு: 144

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 22.10.2011

சென்னை, மேற்கு முகப்பேரில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் பயிலும் 43 மாணாக்கர்கள் மற்றும் 2 ஆசிரியர்கள் ஆகியோர் நேபாளத்திற்கு கல்விச் சுற்றுலா சென்றிருந்த போது, அவர்களில் சிலர் இன்று (22.10.2011) சிலிங் என்னும் இடத்தில் உள்ள ஒரு ஆற்றுப் பாலத்தைக் கடக்கும் போது பாலம் உடைந்து ஆற்றில் விழுந்ததில், பாறையில் மோதி ஒரு மாணவி உயிரிழந்தார்; ஒரு மாணவி ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார் மற்றும் 9 மாணாக்கர்கள் காயம் அடைந்தனர் என்ற செய்தி அறிந்து நான் மிகுந்த துயருற்றேன்.

நேபாளத்தில் உள்ள இந்திய தூதரகத்தைத் தொடர்பு கொண்டு, இறந்த மாணவியின் உடலை தமிழகம் கொண்டு வருவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி புது டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல ஆணையருக்கு உத்தரவிட்டுள்ளேன். மேலும், இந்த விபத்தில் காயமடைந்த மாணாக்கர்களை மருத்துவமனையில் அனுமதித்து உயரிய சிகிச்சை அளிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும், காணாமல் போன மாணவியை விரைந்து கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

மாணவியின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது பெற்றோருக்கும், குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*வெளியீடு, இயக்குநர்,*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*சென்னை-9*

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்